**புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2019**

---

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்துதல், போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல், முதலீடு மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் வறுமை மற்றும் வேலையின்மையினை குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நெடுஞ்சாலையின் கட்டம் ஐ இன் மதிப்படப்பட்ட கிரயம் 55 பில்லியனிற்குள் இருந்ததுடன் 2021 நவம்பர் இல் பூர்த்தி செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

(அ) புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் நிர்மானம் 2016 மார்ச் 02 இல் அமைச்சரவை அமைச்சர்களினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 02 கட்டங்களை உள்ளடக்ககின்றது. கட்டம் I புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான 6.9 கிலோமீற்றர்களை உள்ளடக்குவதுடன் கட்டம் II ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான 10.4 கிலோமீற்றர்களை உள்ளடக்ககின்றது. கட்டம் I இன் சாத்தியவள கற்கை 2015 இல் கொழும்பு நோக்கிய தெற்கு நெடுஞ்சாலை நீடிப்பு செயற்திட்டத்தின் (எஸ்எச்ஈடீசீபி) வேலைப்பரப்பின் கீழ் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. கட்டம் II இன் சாத்தியவள கற்கை, சமூக நில அளவைக்கான பொது மக்கள் ஆர்ப்பாட்டம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் எழுப்பப்பட்ட விடயங்கள் போன்றவற்றின் பெறுபேறாலான திட்டம் மற்றும் சுயவிபரண சீரமைப்பு என்பவற்றில் அடிக்கடியான மாற்றத்தின் காரணமாக, ஆரம்பகட்ட உடன்படிக்கை காலத்திலிருந்து 294 நாட்கள் தாமதத்துடன் 2019 ஒகஸ்ட் 22 இல் பூர்த்தியாக்கப்பட்டு செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை சுற்றாடல் பாதுகாப்பு பிரிவினூடாக நெடுஞ்சாலை அடிச்சுவடு செல்வதன் காரணமாக 2020 ஜுலை 31 வரை கூட மத்திய சுற்றாடல் அதகார சபையினால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டமானது இலங்கையில் நிர்மானித்து செயற்படுத்தி மாற்றம் செய்தல் எனும் அடிப்படையின் கீழ் நிர்மானம் செய்யும் முதல் செயற்திட்டமாகும். பொருளாதார முகாமைத்துவம் மீதான அமைச்சரவை குழு பிஓடீ அடிப்படையின் கீழ் முன்மொழிவகளிற்கான வேண்டுகோளை அழைக்க 2016 ஜுன் 08 இல் அனுமதி வழங்கியிருந்ததுடன் அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி 2016 ஜுன் 28 இல் பெறப்பட்டிருந்தது. எதிர்கால ஏலதாரர்கள் செயற்திட்டத்தின் இரண்டு கட்டங்களின் முதலீடு செய்ய வேறான ஒரு ஆர்வத்தின் வெளிப்பாட்டை (இஓஐ) சமர்ப்பிக்க அழைக்கப்பட்டிருந்தனர். அதனடிப்படையில், கட்டம் I இற்கான 14 விண்ணப்பங்களும் கட்டம் II இற்காக 9 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றிருந்தன. கட்டம் I இற்காக கிடைக்கப்பெற்ற 14 இஓஐகளில், 9 தகுதியான கம்பனிகள் வேண்டுகோள் ஆவணங்களிற்கான வேண்டுகோளை வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அதன்படி, 2019 செப்தம்பர் 03 இலான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானம் இருக்கும் தன்மை பிபிபி - பீஓடீ இன் கீழ் செயற்திட்டத்தின் கட்டம் I இற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து வேண்டுகோளை வீடுக்க அனுமதி வழங்கியிருந்நது. இருப்பினும், 2020 மே 06 ஆம் திகதிய அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம், முன்னய அமைச்சரவை முடிவை ரத்து செய்து, சீனா ஹார்பர் கம்பனி லிமிட்டட்டின் முதலீட்டு முன்மொழிவை மதிப்பிடுவதற்கு BOI உடன் பணிபுரியும் வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 09/2009 | செயற்திட்ட உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை என்பன கைவிரல் அடையாளங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், செயற்திட்டமானது செயற்திட்ட உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்ய கைவிரல் ஸ்கேனரை பயன்படுத்தாததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,728,104 தொகையான மேலதிக நேர கொடுப்பனவும் கைவிரல் ஸ்கேனரை பயன்படுத்தி வருகையை உறுதிப்படுத்தாது செலுத்தியிருந்தது. | அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான சாத்தியம். | செயற்திட்ட உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிப்படுத்த கைவிரல் ஸ்கேனரை பயன்படுத்தாமை மற்றும் மீளாய்வாண்டிற்கான மேலதிக நேர கொடுப்பனவு போன்றவற்றின் மீதான கணக்காய்வாளரின் கருத்துரைகளுடன் உடன்படுகின்றேன். | சுற்றறிக்கை நிபந்தனைகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.3 காணி சுவீகரிப்பு மீதான விடயம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் உண்மை காணி சுவீகரிப்பு செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட 33 சதவீதத்திற்கு எதிராக 27 சதவீதமாக இருந்தது. இருப்பினும், பிரிவு 38, காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்களிற்காக போதியளவு ஒதுக்கீடு காணாததன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதத்திற்கான சாத்தியம். | செயற்திட்டத்தின் காணிசுவீகரிப்பு செயன்முறை மீதான செயலாற்றல் 2019 திசெம்பர் 31 இல் இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு சற்று பின்னாக இருந்தது. இது ஏனைய அக்கரையுடைய தரப்பினர்களின் சந்தேகமான செயலாற்றலே பிரதான காரணமாகும். | நிர்மானத்தின் காணி சுவீகரிப்பின் ஆரம்பிப்பினை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நிளஅளவைத்திணைக்களம்
மற்றும் பிரதேச
செயலகத்தின்
தொடர்புடைய
உத்தியோகத்தர்களின்
செயலாற்றல்
செயற்திட்டத்தின் காணி
சுவீகரிப்பினை நேரடியாக
தாக்கியது.